செ.வெ.எண்: 560 - பத்திரிக்கை செய்தி நாள்: 08/09/2020

பொதுமக்கள் குறைத்தீர்க்கும் மனுக்கள் நாள் கூட்டம் பிரதி வாரம் திங்கள்கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும். மேற்படி கூட்டம் கொராணா நோய் தொற்று காரணமாக தற்போது நடைப்பெறவில்லை. ஆகையால் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெறும் விதமாக மாவட்ட ஆட்சியர் அலுவலக முகப்பு வளாகத்தில் மனுப்பெட்டி வைக்கப்பட்டு மனுக்கள் பெறப்பட்டு தொடர்புடைய துறைக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

தற்பொழுது Covid 19 நோய் தொற்று மேலும் பரவாவண்ணமும், பொதுமக்கள் நீண்ட தூரம் பயணம் செய்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வருவதை தடுக்கும் வகையில் பொதுமக்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்து அவர்களின் கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் விண்ணப்பிக்க புதிதாக Whatsapp செயலி 9344030481 என்ற எண் துவங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இந்த Whatsapp எண்ணுக்கு தங்கள் கோரிக்கை மனுக்களை அனுப்பி பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஒம்)/ம.கோவிந்த ராவ்,
மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

பெறுநர்
மக்கள் செய்தி தொடர்பு அலுவலர், /ஆணைப்படி/